16.12.2025.

**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**SC No. 20/2019**

**அ.சா.22**

**பெயர். திரு.மைக்கேல் இருதயராஜ்**

சாட்சி மீண்டும் முதல் விசாரணையின் தொடர்ச்சியாக திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிராமணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதன்மை விசாரணை தொடர்ச்சி:-**

மேலும் சாட்சிகள் ராமலிங்கம், வீரன், நூர்முகமது, பாவா ஜான், அலாவுதீன், பொன் கண்ணதாசன், தமிழரசன், தனபால் ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கில் இறந்து போன ஜப்பார் என்பவரின் உடல் உள்ளுறுப்புகளை பகுப்பாய்வு செய்து சான்று வழங்கிய திரு.சுரேஷ் மற்றும் திருமதி.ஷர்மிளா, ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் கொலையுண்டு இறந்து போன அப்துல் ஜப்பார் என்பவரின் உடலை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கீதாஞ்சலி என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய பிரேத விசாரணை அறிக்கை இறுதி கருத்துரையுடன் கூடியதை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கில் பிரேதத்தை ஆய்வுக்கு உட்படுத்திய தலைமை காவலர் சக்திவேல் என்பவரை விசாரித்தும், எதிரி திலிப் குமார் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தடயத்தை ரசாயன பகுப்பாய்விற்கு ஒப்படைத்த காவலர் பாலசுப்ரமணியன் என்பவரை விசாரித்தும், இந்த வழக்கில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த உதவி ஆய்வாளர் பிரகாஷ் என்பவரை விசாரணை செய்தும், வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார். மேலும் இவ்வழக்கின் எதிரிகள் 1.மோகன், 2. ரவி, 3.செல்வம், 4.திலீப் குமார்,

ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களில் இருந்து, முஸ்தபா த/பெ.அப்துல் சத்தார் என்பவரும் சதி திட்டம் தீட்டி சம்பவத்திற்கு உடந்தையாக இருந்ததாக தெரிய வந்ததால், எதிரி சேர்க்கை அறிக்கை ஒன்றை தயார் செய்து, அவரை 5ம் தலைமறைவு எதிரியாக சேர்த்துள்ளார். அந்த எதிரி சேர்க்கை அறிக்கை அ.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மேற்படி சாட்சிகள், ஆவணங்களின் அடிப்படையில், ஆய்வாளர் திரு. ஜோகிந்தர் (தற்போது இறந்துவிட்டார்) அவர்கள் இறுதி அறிக்கை மேற்படி 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 120(b), 449, 302, 302 r/w 109 -ன் படி வரைவு இறுதி அறிக்கை தயார் செய்து, உதவி இயக்குனர், குற்ற வழக்கு தொடர்பு துறை, விழுப்புரம் அவர்களின் கருத்துரை பெற்றுள்ளார். அந்த வரைவு இறுதி அறிக்கை அ.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே எதிரிகள், அதே பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து, அனைத்து ஆவணங்களுடன் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். சாட்சி மஜீத் ஆய்வாளர் திரு.ஜோகிந்தர் என்பவரின் விசாரணையில், 27/06/2018-ம் தேதி அன்றுதான் அப்துல் ஜப்பார் வீட்டில் சமரசம் நடந்ததாகவும், பின்னிட்டு கொலை சம்பந்தமான செய்தியை கேள்விப்பட்டு சென்று பார்த்ததாகவும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி குப்புசாமி ஆய்வாளரின் விசாரணையில், 2017 ம் ஆண்டு ஆடி மாதம் 19 ஆம் தேதிக்கு பிறகு, 2, 3 நாட்களுக்குப் பிறகு மோகன், ரவி மற்றும் அவரது அப்பா ரங்கசாமி, நான் மற்றும் ஊர் பெரியவர்கள் எல்லாம் அப்துல் ஜப்பார் வீட்டிற்கு சென்றோம் என்றும், மோகன், ரவி ஆகியோர்களை அப்துல் ஜப்பாரிடம் மன்னிப்பு கேட்க வைத்தோம் என்றும், அப்போது அப்துல் ஜப்பார் காசு இருக்கும் தைரியத்தில் யாரையும் தரக்குறைவாக பேசிவிடலாம் என்று நினைக்காதீர்கள் என்று சொன்னார் என்றும், இனிமேலாவது ஒழுங்கா இருங்க என்று சொல்லி அனுப்பிவிட்டார் என்றும், அப்போது மோகன், ரவி இருவரும் எங்கள் ஆட்கள் முன்னிலையில் எங்களை மன்னிப்பு கேட்க வைத்து விட்டீர்கள், அவரை நாங்கள் சும்மா விட மாட்டோம் என்று சொன்னதாகவும், மேலும் மோகன், ரவி ஆகியோர்களின் லாரியில் மணல் ஏற்றி செல்லும் போது, அப்துல் ஜப்பார் அவர்களை போலீசில் சொல்லி மாட்டிவிட்டு ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார் என்றும், அதனால் பகை மூண்டது என்றும், அப்துல்

ஜப்பாருக்கு வேறு யாருடனும் நேரடியான பகை கிடையாது என்றும், கடந்த 27/06/2018 ம் தேதி பகல் 2 மணிக்கு மேல் அவரை சிலர் அவரது வீட்டில் வைத்து வெட்டி கொலை செய்து விட்டார்கள் என்றும், மோகனும், ரவியும், அவரது வீட்டிற்கு வந்த ஒரு பையனும் சேர்ந்து தான் அப்துல் ஜப்பாரை கொலை செய்திருக்க வேண்டும் என்றும், சம்பவத்தன்று மோகன், ரவி, அந்தப் பையன், மோகனின் டிரைவர், எல்லோரும் வீரன் கோயிலுக்கு அருகில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், அதன் பிறகு தான் கொலை நடைபெற்றது என்றும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான், சாட்சி கலில் என்பவரும் ஆய்வாளர் திரு.ஜோகிந்தர் என்பவரின் விசாரணையில், 27/06/2018-ம் தேதி அன்றுதான் அப்துல் ஜப்பார் வீட்டில் சமரசம் நடந்ததாகவும், பின்னிட்டு கொலை சம்பந்தமான செய்தியை கேள்விப்பட்டு சென்று பார்த்ததாகவும், சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சிவீரன் என்பவர் ஆய்வாளர் ஜோகிந்தர் என்பவரின் விசாரணையில், 27/06/2018 ம் தேதி மதியம் சுமார் 2:30 மணியளவில், நிலத்தில் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்கு செல்ல அப்துல் ஜப்பார் என்பவரின் வீட்டிற்கு பின்புறம் உள்ள கரும்புத் தோட்டத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அவரது வீட்டின் பின்புறம் உள்ள கரும்புத் தோட்டத்தின் வரப்பில், அவரது ஊரை சேர்ந்த மோகன் அவரது தம்பி ரவி, அவரது வீட்டிற்கு வந்த ஒரு பையன், ஆகியோர்கள் வரப்பில் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அன்று மாலை 6:25 மணிக்கு, அப்துல் ஜப்பார் அவரது பண்ணை வீட்டில் கொலை செய்யப்பட்டு கிடக்கிறார் என்று கேள்விப்பட்டேன் என்றும், நான் சென்று பார்த்தேன் என்றும், அப்போது மோகனுக்கும், அப்துல் ஜப்பாருக்கும், நடந்த ஒரு பஞ்சாயத்தில் அசிங்கப்படுத்தியது சம்பந்தமாக அப்துல் ஜப்பார் மீது மோகன் விரோதம் கொண்டிருந்தார் என்றும், மதியம் நான் பார்த்த மோகன் மற்றும் ரவி பெங்களூரை சேர்ந்த ஒரு பையன் ஆகியோர் சேர்ந்துதான் அப்துல் ஜப்பாரை கொலை செய்திருக்க வேண்டும் என்றும், சந்தேகம் உள்ளது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி இராமலிங்கம் ஆய்வாளரின் விசாரணையில், 27/06/2018 ம் தேதி மதியம் சுமார் 2:30 மணியளவில், நிலத்தில் வேலையை முடித்துக் கொண்டு வீட்டிற்கு செல்ல அப்துல் ஜப்பார் என்பவரின்

வீட்டிற்கு பின்புறம் உள்ள கரும்புத் தோட்டத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது அவரது வீட்டின் பின்புறம் உள்ள கரும்புத் தோட்டத்தின் வரப்பில், அவரது ஊரை சேர்ந்த மோகன் அவரது தம்பி ரவி, அவரது வீட்டிற்கு வந்த ஒரு பையன், ஆகியோர்கள் வரப்பில் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அன்று மாலை 6:25 மணிக்கு, அப்துல் ஜப்பார் அவரது பண்ணை வீட்டில் கொலை செய்யப்பட்டு கிடக்கிறார் என்று கேள்விப்பட்டேன் என்றும், நான் சென்று பார்த்தேன் என்றும், அப்போது மோகனுக்கும், அப்துல் ஜப்பாருக்கும், நடந்த ஒரு பஞ்சாயத்தில் அசிங்கப்படுத்தியது சம்பந்தமாக அப்துல் ஜப்பார் மீது மோகன் விரோதம் கொண்டிருந்தார் என்றும், மதியம் நான் பார்த்த மோகன் மற்றும் ரவி பெங்களூரை சேர்ந்த ஒரு பையன் ஆகியோர் சேர்ந்துதான் அப்துல் ஜப்பாரை கொலை செய்திருக்க வேண்டும் என்றும், சந்தேகம் உள்ளது என சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

1ம் எதிரி ஆஜர். 2 முதல் 5 எதிரிகள் ஆஜராகாமல் அவர்கள் தரப்பில் 317 கு.வி.மு.ச படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் அ.சா.22-யை குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.

**மறு விசாரணை:-**

**இல்லை.**